## மே – 14 – செவ்வாய்

### புனித மத்தியா திருவிழா

### “நீங்கள் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொள்ள வேண்டும் என்பதே என் கட்டளை” யோவா15:12

### முதல் வாசகம் : திருத்தூதர் பணி 1: 15 –17,20 – 26

அப்போது ஒருநாள், ஏறக்குறைய நூற்றிருபது சகோதரர் சகோதரிகள் ஒரே இடத்தில் கூடியிருக்கும்போது பேதுரு அவர்கள் நடுவே எழுந்து நின்று கூறியது. ”அன்பர்களே, இயேசுவைக் கைது செய்தவர்களுக்கு வழிகாட்டிய யூதாசைக் குறித்து தூய ஆவியார் தாவீதின் வாயிலாக முன்னுரைத்த மறைநூல் வாக்கு நிறைவேற வேண்டியிருந்தது.அவன் நம்மில் ஒருவனாய் எண்ணப்பட்டு நாம் ஆற்றும் பணியில் பங்குபெற்றிருந்தான். ஆகையால் ஆண்டவர் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குச் சாட்சியாய் விளங்க, அவர் நம்மிடையே செயல்பட்டக்காலத்தில் நம்மோடு இருந்த ஒருவரைச் சேர்த்துக்கொள்ள நாம் கூடி வரவேண்டியது தேவையாயிற்று. யோவான் திருமுழுக்குக் கொடுத்துவந்த காலமுதல் ஆண்டவர் இயேசு நம்மிடமிருந்து விண்ணேற்றமடைந்த நாள்வரை அவர் நம்மோடு இருந்திருக்கவேண்டும்.” அத்தகையோருள், இருவரை முன்னிருத்தினார்கள். ஒருவர் யோசேப்பு என்னும் பெயர் கொண்ட பர்சபா. இவருக்கு யுஸ்து என்னும் பெயரும் உண்டு. மற்றவர் மத்தியா.பின்பு அவர்கள் அனைவரும், ”ஆண்டவரே, அனைவரின் உள்ளங்களையும் அறிபவரே, யூதாசு திருத்தொண்டையும் திருத்தூதுப் பணியையும் விட்டகன்று தனக்குறிய இடத்தை அடைந்துவிட்டான். அந்த யூதாசுக்கு பதிலாக யாரைத் தெரிந்தெடுக்க வேண்டும் என இந்த இருவருள் ஒருவரை எங்களுக்கு காண்பியும்” என்று இறைவனிடம் வேண்டிக் கொண்டனர். அதன்பின் அவர்கள் சீட்டு குலுக்கினார்கள். சீட்டு மத்தியா பெயருக்கு விழவே அவர் பதினொரு திருத்தூதர்களோடும் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

**பதில்பாடல் :** உயர்குடி மக்களிடையே அவர்களை அமரச் செய்கின்றார்.

### நற்செய்தி : யோவான் 15 : 9 – 17

அக்காலத்தில் இயேசு கூறியது : என் தந்தை என் மீது அன்பு கொண்டுள்ளது போல நானும் உங்கள்மீது அன்பு கொண்டுள்ளேன். என் அன்பில் நிலைத்திருங்கள்.நான் என் தந்தையின் கட்டளைகளைக் கடைப்பிடித்து அவரது அன்பில் நிலைத்திருப்பது போல நீங்களும் என் கட்டளைகளைக் கடைப்பிடித்தால் என் அன்பில் நிலைத்திருப்பீர்கள்.என் மகிழ்ச்சி உங்களுள் இருக்கவும் உங்கள் மகிழ்ச்சி நிறைவு பெறவுமே இவற்றை உங்களிடம் சொன்னேன்.”நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பதுபோல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்புகொண்டிருக்க வேண்டும் என்பதே என் கட்டளை.தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை.நான் கட்டளை இடுவதையெல்லாம் நீங்கள் செய்தால் நீங்கள் என் நண்பர்களாய் இருப்பீர்கள்.இனி நான் உங்களைப் பணியாளர் என்று சொல்ல மாட்டேன். ஏனெனில் தம் தலைவர் செய்வது இன்னது என்று பணியாளருக்குத் தெரியாது. உங்களை நான் நண்பர்கள் என்றேன் ஏனெனில் என் தந்தையிடமிருந்து நான் கேட்டவை அனைத்தையும் உங்களுக்கு அறிவித்தேன்.நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை. நான்தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன். நீங்கள் கனிதரவும், நீங்கள் தரும் கனி நிலைத்திருக்கவும் உங்களை ஏற்படுத்தினேன். ஆகவே நீங்கள் என் பெயரால் தந்தையிடம் கேட்பதையெல்லாம் அவர் உங்களுக்குக் கொடுப்பார். நீங்கள் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொள்ள வேண்டும் என்பதே என் கட்டளை” என்றார்.

**தியானம்:** கடவுள் வெறுமனே மனிதர்களை படைத்து விளையாட்டுக்காக இந்த உலகத்திற்கு அனுப்பிவைக்க வில்லை. ஒவ்வொரு மனிதனையும் தனது திட்டத்தை நிறைவு செய்ய அவர்களை உருவாக்கி இந்த உலகத்திற்கு அனுப்பி வைக்கின்றார். “யாக்கோபே, உன்னைப் படைத்தவரும், இஸ்ராயேலே, உன்னை உருவாக்கியவருமான ஆண்டவர் இப்போது கூறுகின்றார்: அஞ்சாதே, நான் உன்னை மீட்டுக்கொண்டேன், உன் பெயரைச் சொல்லி உன்னை அழைத்தேன், நீ எனக்கு உரியவன்” (எசா.43:1) என்று எசாயா புத்தகத்தின் வாழியாக நாமெல்லாம் கடவுளுக்குச் சொந்தமானவர்கள் என்றும், “தாயின் வயிற்றில் இருக்கும் போதே என்னைத் தமக்கென ஒதுக்கிவைத்துத் தமது அருளால் என்னை அழைத்த கடவுள்” (கலா.1:15), “நாம் தூயோராகவும், மாசற்றவராகவும் தம் திருமுன் விளங்கும்படி, உலகம் தோன்றுவதற்கு முன்பே கடவுள் நம்மைக் கிறிஸ்து வழியாகத் தேர்ந்தெடுத்தார். அவர் நம்மை இயேசு கிறிஸ்துவின் மூலம் தமக்குச் சொந்தமான பிள்ளைகளாக்கிக் கொள்ள அன்பினால் முன்குறித்து வைத்தார். இதுவே அவரது திருவுளம்” (எபே.1:4-6) என்று பவுலடியார் வழியாக தமது திட்டத்தை நிறைவேற்றவே நம்மை அவர் தேர்ந்தெடுத்திருக்கிறார் என்பதும் நமக்கு தெளிவாய் தெரிகின்றது. எனக்கான கடவுளின் திட்டம் என்ன? அவர் என் வழியாக இந்த உலகத்திற்கு என்ன செய்ய விரும்புகிறார்? என்பதை எந்த மனிதன் கடவுளின் பிரசன்னத்தில் அமர்ந்து கண்டு கொள்கின்றானோ அவனே இந்த உலகத்தில் நிறைவான, நிலையான வாழ்வை வாழமுடியும். இல்லையென்றால் ஒருவிதமான வெறுமையும், தனிமையும் மனிதர்களை ஆட்கொண்டு வாழ்வே வெறுத்துப் போவது போன்று மாறிவிடும். நான் ஏன் பிறந்தேன்? எதற்கு வாழவேண்டும்? நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்? என்னால் இந்த உலகத்திற்கு என்ன பயன்? நான் ஏன் வாழ வேண்டும்? என்று எத்தனையோ மனிதர்கள் தங்களுடைய வாழ்வுக்கான அர்த்தம் தெரியாமல் தங்கள் வாழ்வையே முடித்துக் கொள்வதையும், மன அழுத்தங்களுக்குள்ளாகித் தவிப்பதையும் நாம் கண்ணாரக் காண்கின்றோம். நான் கடவுளால் உருவாக்கப்பட்டிருக்கின்றேன், நான் அவரால் தேர்ந்துகொள்ளப்பட்ட பாத்திரம், நான் கனி கொடுக்கப் பிறந்தவன் என்று தன்னை கடவுளில் இணைத்து கனி கொடுக்கின்றவர்களே இந்த உலகத்தில் மகிழ்வாக நிறைவாக வாழுகின்ற மனிதர்களாக இருக்கின்றார்கள். எனவே வாழ்க்கை என்பது ஒருமுறை நமக்குக் கொடுக்கப்படுகின்றது. அந்த வாழ்வை கடவுளுக்காகக் கொடுத்து, கடவுளின் திட்டம் நிறைவேற்றப்பட நம்மை அர்ப்பணித்து வாழுவோம் இறைவனுடைய அருளால் கனி கொடுத்து வாழுகின்ற இயேசுவின் சீடர்களாக வாழுவோம்.